# பாஸ்காக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு **A**

**இன்றைய வாசகங்கள்:**

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 2: 14, 22-33,

திருப்பாடல் 16:1-2, 5-6, 7-8, 9-10,

தூய பேதுரு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 17-2,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 13-35

## திருப்பலி முன்னுரை:

### எங்களோடு தங்கும் ஆண்டவரே!

வழிப்போக்கர்களே, உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால், உயிர்ப்பு காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். இருள் சூழும் நேரத்தில் நாம் நடந்து செல்லும்போது, இயேசு நமக்கு வழித்துணையாக வருகிறார் என்பதை உணர்ந்துகொள்ள இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவின் இறப்பால் மனம் உடைந்து போயிருந்த சீடர்கள் இருவர் எம்மாவு செல்லும் வழியில், ஆண்டவர் உடன் நடப்பதைக் காண்கிறோம். அவர்களின் அவநம்பிக்கையைப் போக்கும் விதமாக மறைநூலின் இறைவாக்குகள் மூலம் தமது உயிர்ப்பை விளக்கி கூறுகிறார். இயேசு அப்பத்தைப் பிட்டபோது, சீடர்கள் அவரைக் கண்டு கொண்டார்கள். நற்கருணையில் நம்மோடு உடனிருக்கும் ஆண்டவர் இயேசுவை, நமது விசுவாசப் பயணத்தில் வழித் துணையாக கொண்டு வாழும் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**வாழ்வின் வழித்துணையே இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உம்மையே வழித் துணையாக கொண்டு விசுவாச வாழ்வில் நடை பயிலவும், உம் மக்களை வழிநடத்தவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**மூவுலக அரசரே இறைவா,**

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்கருணையில் உம் திருமகனின் உடனிருப்பை உணரவும், பிற சமயத்தினர் முன்னிலையில் உமக்கு சான்று பகரவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**மன்னிக்கும் மகத்துவமிக்க எம் இறைவா!**

பாஸ்கா காலத்தில் எங்கள் குடும்பங்களுக்கு உமது உயிர்ப்பின் பலனான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பகிர்ந்து வாழும் நல்மனம் ஆகியவற்றை நிறைவாய் பொழிந்து, எங்கள் குடும்பங்களில் உமது துணையாளரின் அருளால் சாட்சிய வாழ்வு வாழவும் உமது இரக்கத்தை அருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கருணைக் கடலே எம் இறைவா!**

வாழ்வில் நம்பிக்கை இழந்த எம் மக்களின் தொற்றுநோயிலிருந்து விடுபடவும், வாழ்வாதரங்கள் சிறப்படையவும், அவர்கள் மனித நேயத்துடன் நடத்துப்படவும், விரைவில் குடும்பங்கள் ஒன்றிணைந்திடவும், மகிழ்ச்சியுடன் பாஸ்கா காலத்தைக் கொண்டாடத் தேவையான அருளைப் பொழிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**இளைஞனே எழு! எழுந்து ஒளிவீசு என்ற எம் இறைவா!**

சிற்றின்பமான உல்லாசமான வாழ்கையில் தங்களின் ஆற்றலையும், திறமைகளையும் வீணாக்குகின்ற இளைஞர்கள் இயேசுவின் அன்பினால் ஈர்க்கப்படவும், தங்களின் வாழ்வை புனிதமான வழிகளில் நடத்தவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா,**

உம் மக்கள் இன்றைய சூழலில் வயது முதிர்ந்தவர்களை பேணி காக்கும் நிலைமாறி, முதியோர் இல்லங்கள் பெறுகிவரும் நிலையில் அவர்களுக்கு நீர் தந்தையாகவும், தாயாகவும் நின்று, தாங்கள் கடந்து வந்த பாதையைக் குறித்து அவர்கள் துன்புறும் வேளையில் அவர்களுக்கு அன்பினை பொழிந்து அரவணைத்தும் நல்ஆயனாக இருந்து வழி நடத்திட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

**இரக்கம் நிறைந்த எம் இறைவா!**

இன்று தொற்றுநோயால் மரித்த அனைத்து ஆன்மாகள் அனைவரையும் நினைவு கூர்கிறோம். அவர்கள் உமது நிறைவாழ்வைப் பெறவும், அவர்களின் குடும்பத்தார்கள் ஆறுதலும், தேற்றுதலும் பெறவும், அவர்களுக்காக உழைத்த எல்லா நல் உள்ளங்கள் நலமுடன் தம் பணிகளைத் தொடரவும் தேவையான இறைஅருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**www.tamilcatholicnews.com**